# ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)

# திருச்சிராப்பள்ளி – 620020

# 2023-2024

## அரசுக் கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க மாணவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

## புதியது மற்றும் புதுப்பித்தல்

**BC MBC, SC, ST** வகுப்பிற்கான அரசு கல்வி உதவித் தொகைக்கு மாணவர்கள் இணைய வழியில் விண்ணப்பிக்க வேண்டும். இணைய வழியில் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க ஆதார் **E- KYC** கட்டாயம் என்பதால் மாணவர்கள் தங்களது ஆதார் எண்ணுடன் இணைந்த கைபேசி எண்ணை செயலில் வைக்க வேண்டும்.

ஏனெனில் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள கைபேசி எண்ணிற்கு வரும் OTP மூலம் E- KYC நிறைவு செய்த பின் மாணவர்கள் தங்களது இணைய வழி கல்வி உதவித்தொகை விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய முடியும்.

ஆதார் அட்டையில் மாணவர்களின் பெயர் தங்களது 10ம் வகுப்பு மதிப்பெண் பட்டியலில் உள்ளவாறு இருக்கிறது என்பதை உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு இல்லையெனில் ஆதார் அட்டையில் பெயர் திருத்தும் செய்து 10ம் வகுப்பு மதிப்பெண் பட்டியலில் உள்ளவாறு சரி செய்து கொள்ள வேண்டும்

மாணவர்கள் சாதி சான்று மற்றும் வருமான சான்றுகளை இணைய வழியில் பெற்றிருந்தால் மட்டுமே கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க முடியும். இணைய சான்று இல்லாதவர்கள் உடன் அரசு E- சேவை மையத்தை தொடர்பு கொண்டு சாதி சான்று மற்றும் வருமான சான்று ஆகியவற்றிற்கு விண்ணப்பித்து பெற வேண்டும்.

ஆதார் இணையத்தளத்தில் மாணவர்கள் login செய்து தங்களது ஆதார் எண்ணுடன் வங்கி கணக்கு இணைந்திருப்பதை Aadhar seeding status என்ற linkல் உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

ஆதார் எண்ணுடன் வங்கி கணக்கு இணைந்திருந்தால் அந்த பக்கத்தை நகல் எடுத்து கல்வி உதவித்தொகை விண்ணபத்துடன் இணைக்க வேண்டும்.

ஆதார் எண்ணுடன் வங்கி கணக்கு இணையாமல் இருந்தால் உடன் மாணவர்கள் தங்களது வங்கியை தொடர்பு கொண்டு ஆதார் எண்ணை வங்கி கணக்கோடு இணைக்க வேண்டும்.

மேற்கண்ட விபரங்களை மாணவர்கள் சரியாக வைத்திருந்தால் மட்டுமே இந்த கல்வி ஆண்டிற்கு அரசு கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க முடியும்.

கல்வி உதவி தொகைக்கு விண்ணப்பிக்க வேண்டிய இணையதள முகவரி மற்றும் விண்ணப்பிக்க கால அவகாசம் போன்ற விபரங்கள் **17-10-2023** அன்று சுற்றறிக்கையின் மூலம் மாணவர்களுக்கு தெரிவிக்கப்படும்.

JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS) TIRUCHIRAPPALLI - 20.

10.10.2023

நாள்: 10-10-2023
திருச்சிராப்பள்ளி - 620020

முதல்வர் i/c